# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

31.08.2018–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

## பொருட்கள்

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

105.) வந்தவாசி நகராட்சி புதிய பேருந்து நிலையம் கடைகள் வழக்கு சம்மந்தமாக வந்தவாசி நகராட்சிக்கு எதிராக கீழ்வரும் விபரத்தில் காணும் வந்தவாசி நகராட்சி ஏலதாரர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

விபரம்

| வ.எண். | நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் விபரம் | சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண். | வழக்கு கட்டணம் ரூபாய். |
|---|---|---|---|
| 1 | திரு.வி.சுந்தரம் | WPNo.2888/ 2012 | 15000 |
| 2 | திரு.ஆர்.கோவிந்தன் | WPNo.2889/ 2012 | 15000 |
| 3 | திருமதி.ப.சுசீலா | WPNo.2890/ 2012 | 15000 |
| 4 | திருமதி.நளினி | WPNo.2891/ 2012 | 15000 |
| 5 | திரு.சிவசங்கரன் | WPNo.2892/ 2012 | 15000 |
| | | மொத்தம் ரூ. | 75000 |

மேற்கண்ட வழக்குகளை எதிர்கொள்ளவும், அதற்கான வழக்கு கட்டணம் ரூ.75000/–ஐ அரசு வழக்கறிஞர் திரு.O.செல்வம் அவர்களுக்கு செலுத்தவும், மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வழக்கு கட்டணம் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று அரசு வழக்கறிஞர் திரு.O.செல்வம் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.75000/– செலுத்த செலவினத்திற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.22 /2012/எப்1, நாள்.03.08.2018) **(அனுமதிக்கப்பட்டது)**

**106.** அரசு ஆணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018ல் 01.04.2018 முதல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும் வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகமாலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகமாலும் சொத்துவரி உயர்வு செய்தி அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018ல் ஏற்கனவே வழங்கப்பட்ட அரசாணையில் உத்திரவிடப்பட்ட வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் 100 சதவிகிதத்திற்கு மிகமால் என்பதை தற்போது 50 சதவிகிதத்திற்கு மிகமால் சொத்துவரி உயர்வு செய்திட திருத்திய உத்திரவு வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. பதிவு செய்யலாம்.
2. அரசாணையின்படி 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு செய்தி அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1212/2018/அ1,) **(அனுமதிக்கப்பட்டது)**

**107.** வந்தவாசி நகராட்சியில் தூய்மை இந்திய திட்டம்–திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது கடித எண்.22866/2018/P3, நாள்.20.08.2018–ல் வந்தவாசி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைக்காக பேட்டரிகள் இயக்கும் வாகனம் 9 எண்ணிக்கைக்கு (ரூபாய் 16.20 இலட்சத்திற்கு ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் ரூ.16.20 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 090/2018/இ1) **(அனுமதிக்கப்பட்டது)**

108.வந்தவாசி நகராட்சியின் முலம் உயிரியல் பல்வகைமைசட்டம் - 2002 (மத்தியச்சட்டம்), உயிரியல் பல்வகைமைவிதிகள் - 2004 மற்றும் தமிழ்நாடுஉயிரியல் பல்வகைமைவிதிகள் - 2017 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுநெறிமுறைகளின் படி இந்நகராட்சியின் எல்லைக்குட்ப்பட்டபகுதிகளில் உள்ள தனித்துவமிக்கதாவரங்கள் மற்றும் பல்லுயிர்களின் பாதுகாப்பிற்க்காக பின்வரும் உறுப்பினர்களைக்கொண்ட **பல்லுயிர் மேலாண்மைக் குழு** அமைக்கப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

பல்லுயிர் மேலாண்மைக் குழு உறுப்பினர்கள்

**1. Members of Biodiversity Management Committee**

| S.No | Name | Designation |
|---|---|---|
| 1 | Thiru. S. Parthasarathy, B.A.,<br>Commissioner,<br>Vandavasi Municipality. | Chairman |
| 2. | Gangaiyamman,<br>Self Help Group, Vandavasi | Member |
| 3 | Samanthipoo,<br>Self Help Group, Vandavasi | Member |
| 4 | Mr.T. Kumar,<br>Rotary Club, Vandavasi | Member |
| 5 | Mr.Gunasekar, Farmer,<br>Emappair, Vandavasi | Member |
| 6 | Gangai,<br>Self Help Group, Vandavasi | Member |

**2. Special Invitees -** சிறப்பு அழைப்பாளர்கள்

| S.No | Designation & Department |
|---|---|
| 1 | Ranger Officer,<br>Forest Department, Vandavasi |
| 2 | Asst. Director, Agriculture, Vandavasi |
| 3. | PA to District Education Officer, Cheyyar |
| 4 | Block Development Officer(VP), Vandavasi |
| 5 | Asst. Director of Horticulture, Vandavasi |
| 6 | Veterinary Surgeon, Veterinary Hospital,<br>Vandavasi |

அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**Roc.No. 1434 /2018/H1, DATED:30.08.2018** (அனுமதிக்கப்பட்டது)

**109.** வந்தவாசி நகராட்சியில் மொத்தம் **24** வார்டு பகுதிகள் மற்றும் **9.71** சதுர கி.மீ எல்லை அளவு கொண்ட நகர்பகுதியாகும். நகர் பகுதியின் விரிவாக்கத்தால் வீடுகளின் எண்ணிக்கையும், மற்றும் நாளுக்கு நாள் மக்கள் தொகையும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. தற்போது **2018–2019**ல் நகர்பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் கடைகள் எண்ணிக்கை **7965** ஆக உள்ளது. இதில் கடைகளின் எண்ணிக்கை மட்டும் **1854** ஆக உள்ளது. நகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட மொத்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை **49** ஆகும். இதில் தற்போது **30** துப்புரவு பணியாளர்கள் மட்டும் பணிசெய்து வருகின்றனர். இவர்களைக் கொண்டு **24** வார்டுகளில் உள்ள வீடுகளில் மற்றும் கடைகளில் சேகரம் ஆகும் குப்பைகளை தரம்பிரித்து வாங்குவது, தெரு குப்பைகளை சேகரிப்பது மார்க்கெட் மற்றும் பிரதான சாலைகளில் உள்ள பஜார் தெருக்களின் கழிவு குப்பைகளை வாங்குவது, கால்வாய் குப்பைகள் மண் அகற்றுவது போன்ற பணிகள் செய்வது மிகவும் சிரமமாக உள்ளதால் மாற்று ஏற்பாடுகள் செய்வது மிகவும் அத்தியாவசிய பணியாக உள்ளது.

எனவே அரசாணை எண்.101, நாள்.30.04.1997ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் நேர்முக கடிதம் எண்.20053/97/ஜே3 நாள்.24.03.1997–ன் படியும் அரசாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அரசாணை எண்.284/இ.செ(எஸ்)/ந.நி.ம.இ.வ/97–1 நாள்.29.04.1997–ன்படி வெளியிடப்பட்டது.

மேற்கண்ட அரசாணையின்படி இந்நகராட்சிக்கு கீழ்வரும் விபரத்தில் காணும் அளவுகோல்படி துப்புரவுபணியாளர்கள் தேவைப்படுகிறது.

<u>விபரம்</u>

| | | |
|---|---|---|
| சுமார் **7945** குடியிருப்புகளுக்கு (**250** குடியிருப்புக்கு **3** நாள் வீதம்) | – | **96** நபர்கள். |
| **1.**பெரிய லாரிக்கு ரூ.**1** | – | **4** நபர்கள் |
| **2.**சிறிய லாரி **2**க்கு (**2x3** நபர்) | – | **6** நபர்கள் |
| **3.**எருகிடங்கிற்கு (**20** டன்னுக்கு குறைவு) | – | **2** நபர்கள் |
| **4.**பேருந்து நிலையம் | – | **2** நபர்கள் |
| **5.**பேருந்து நிலைய கழிப்பறை (நம்ம டாய்லட் உட்பட) | | |
| ஆண்–**1x2** – **2** நபர்கள், பெண்–**1x2** – நபர்கள். | – | **4** நபர்கள் |
| **6.**பேருந்து நிலையம் சுத்தம் செய்ய சி (ம) டி பிரிவிற்கு **2x2** | – | **4** நபர்கள் |
| மொத்தம் | – | **118** நபர்கள். |

அரசாணை எண்.**101**–ன்படி இந்நகராட்சிக்கு மொத்தம் **118** பணியாளர்கள் தேவைப்படுகின்றனர், ஆனால் நகராட்சியில் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மொத்தம் **30** நபர்கள் மட்டுமே உள்ளனர். ஆகையால் துாய்மை பணி செய்வது மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் அரசாணை எண்.**101**–ன்படி **118** நபர்களுக்கு **30** நபர்கள் மட்டுமே உள்ளதால் இதன்படி **88** நபர்கள் தேவைப்படுகின்றனர். அரசிடம் இருந்து நிரந்தரப்பணியாளர்கள் நிரப்பப்படாமல் உள்ளதால் Out Sorusing முறையில் மகளிர் சுய உதவிக்குழுவைக் கொண்டு துப்புரவு பணி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அட்டவணை அடிப்படையில் மகளிர் சுயஉதவிக்குழு மூலம் பணி செய்திடவும், மேலும் வந்தவாசி நகராட்சியில் கடந்த ஆண்டுகளில் **இந்திராகாந்தி** மகளிர் சுய உதவிக்குழு என்கிற ஒரே குழுதான் செயல்பட்டு வந்தது. ஒரு குழுவில் **30** எண்ணிக்கை க்கு குறைவான உறுப்பினர்கள் மட்டும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் உள்ளதால் ஒரு குழுவிலிருந்து அதிகளவு எண்ணிக்கை உறுப்பினர்களை துப்புரவு பணிக்கு ஈடுபடுத்த இயலாத நிலை உள்ளது. தற்போது மேற்கண்ட இந்திராகாந்தி மகளிர் சுய உதவிக்குழுவில் இருந்தே மேலும் **2** எண்ணிக்கை சுய உதவிக்குழுக்கள் பிரிந்து தற்போது **3** எண்ணிக்கை சுய உதவிக்குழுக்களாக செயல்பட்டு வருகின்றது.

<u>மகளிர் சுய உதவிக்குழுக்கள் விபரம்.</u>

1. இந்திராகாந்தி மகளிர் சுய உதவிக்குழுவில் – **18** நபர்
2. தென்றல் மகளிர் சுய உதவிக்குழுவில் – **17** நபர்
3. தாமரை மகளிர் சுய உதவிக்குழுவில் – **17** நபர்

ஆகமொத்தம் 52 நபர்களை வைத்து செயல்பட்டால்தான் வந்தவாசி நகர் பகுதியினை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தூய்மை பணி செய்திடவும், 24 வார்டுகளிலும் கால்வாய் சுத்தம் செய்தல், கல்வெர்ட் அடைப்பு நீக்குதல் போன்ற பணிகள் செய்திடவும், மற்றும் 01.07.2018 முதல் 30.06.2019 வரை 1 ஆண்டு காலத்திற்கு பணிக்கு அமர்த்திக்கொள்ளவும், மேலும் நகராட்சியின் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு 1 நாளுக்கு தினக்கூலி ரூ.225.00 வீதம் வழங்கவும், மூன்று குழுக்களில் உறுப்பினர்கள் 52 நபர்களுக்கு மாத ஊதியம் ரூ.3,15,900/– (சுமார் 27 நாட்களுக்கு) வழங்கவும், ஆண்டு 1க்கு ஆகும் தோராய செலவினம் ரூ.40,00,000/– ரூபாய் நாற்பது இலட்சத்துக்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதியும், தூய்மை இந்தியா திட்டம், பொது சுகாதாரப் பணி அவசியம் கருதியும், நகர்மன்ற அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று மகளிர் குழுவில் இருந்து தூய்மை காவலராக நியமித்துக்கொள்ளவும், அதற்கான தினக்கூலி வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டதையும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1529/2017/எச்1, நாள்.19.06.2018) **(அனுமதிக்கப்பட்டது)**

**110.** வந்தவாசி நகராட்சி பொது சுகாதார பிரிவில் 2018–2019ம் ஆண்டிற்கு வருகின்ற காலம் மழைக்காலம் என்பதால் டெங்குநோய் தடுப்பு நடவடிக்கைக்காகவும், மற்றும் பொது சுகாதார உபயோகத்துக்காகவும், நடவடிக்கைக்காக பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம், பொது கழிப்பிடங்கள், பள்ளி வாசல்கள், கோயில் திருவிழாக்கள், சர்ச்பகுதிகள் மற்றும் நகர்முழுவதும் நடக்கும் இறப்பு நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு பிளீச்சிங்பவுடர் மற்றும் சுண்ணாம்புத்தூள் இல்லாத காரணத்தால் 1. பிளீச்சிங்பவுடர், 3000 கிலோ மற்றும் சுண்ணாம்பு பவுடர்– 5000 கிலோ சப்ளை பெறவும் அதற்காகும் தோராய செலவு ரூ.2,50,000/– (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்மட்டும்) GST உள்பட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
மேலும் பொது சுகாதாரம் அவசரம், அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி விவரம் | விலைப்புள்ளி விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | ராஜேஸ்வரி & நாதன் கெமிக்கல்ஸ் & டிரேடர்ஸ் பெரம்பூர் சென்னை–11 | 1. சுண்ணாம்பு பவுடர் கிலோ–1க்கு<br>2. பிளீச்சிங் பவுடர் கிலோ –1க்கு | ரூ.7.00<br>ரூ.55.00 |
| 2. | SB & கோ No.1 EI நகர் சேலையூர் சென்னை 73 | 1. பிளீச்சிங் பவுடர் கிலோ –1க்கு<br>2. சுண்ணாம்பு பவுடர் கிலோ–1க்கு | ரூ.67.00<br>ரூ.9.00 |

<u>அலுவலக குறிப்பு</u> –

1. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் சுண்ணாம்பு பவுடர் கிலோ – 1க்கு ரூ.7.00 எனவும், பிளீச்சிங்பவுடர் கிலோ 1க்கு ரூ.55.00 எனவும் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள ராஜேஸ்வரி & நாதன் கெமிக்கல்ஸ் & டிரேடர்ஸ் சென்னை–11 நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

2. பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று குறைவான தொகைக்கு சுண்ணாம்பு பவுடர் கிலோ–1க்கு ரூ.7.00 எனவும், பிளீச்சிங்பவுடர் கிலோ –1க்கு ரூ.55.00 எனவும் விலைப்புள்ளி கொடுத்துள்ள ராஜேஸ்வரி & நாதன் கெமிக்கல்ஸ் & டிரேடர்ஸ் சென்னை–11 நிறுவனத்து சப்ளை செய்தல் உத்திரவு வழங்கவும், தொகை வழங்கவும், நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(அனுமதிக்கப்பட்டது)**

**111.** வந்தவாசி நகராட்சி 9.71 சதுர கி.மீ. பரப்பளவுடன் 24 வார்டுகளாக அமைந்துள்ளது. 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 31317 ஆகும். இந்நகராட்சியில் தற்போது தினசரி 3.10 மில்லியன் லிட்டர் குடிநீர், நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் என்ற அளவில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2018–19–ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34–ற்கான விவாதத்தின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு எண்.14ல் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*“மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) நிறுவப்படும்”*

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* தனியார் தொழில் நிறுவனங்களுடன்/ தொழிற் முனைவோர்களுடன் இணைந்து சமூகப் பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று (Corporate Social Responsibility fund) செயல்படுத்தவும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்யவும் பார்வையில் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சியில் அமைந்துள்ள 24 வார்டுகளிலும் தானியங்கி குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தானியங்கும் குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* அமைப்பதற்கான மதிப்பீடு விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1 | 1 | 18.00 |
| 2 | 2 | 18.00 |
| 3 | 3 | 18.00 |
| 4 | 4 | 18.00 |
| 5 | 5 | 18.00 |
| 6 | 6 | 18.00 |
| 7 | 7 | 18.00 |
| 8 | 8 | 18.00 |
| 9 | 9 | 18.00 |
| 10 | 10 | 18.00 |
| 11 | 11 | 18.00 |
| 12 | 12 | 18.00 |
| 13 | 13 | 18.00 |
| 14 | 14 | 18.00 |
| 15 | 15 | 18.00 |
| 16 | 16 | 18.00 |
| 17 | 17 | 18.00 |
| 18 | 18 | 18.00 |
| 19 | 19 | 18.00 |
| 20 | 20 | 18.00 |
| 21 | 21 | 18.00 |
| 22 | 22 | 18.00 |
| 23 | 23 | 18.00 |
| 24 | 24 | 18.00 |
| | கூடுதல் | 432.00 |

வந்தவாசி நகராட்சியில் உள்ள 24 வார்டு பகுதிகளில் தானியங்கும் குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* அமைக்கும் பணி மேலே பட்டியலில் கண்டுள்ள மதிப்பீட்டின்படி மேற்கொள்ள "Expression of Interest" (EoI) கோரவும் இத்திட்டப்பணிக்கான முழுத் தொகை மற்றும் பராமரிப்புச் செலவினம் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களில் பங்களிப்பு பெற்று இத்திட்டம் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டி திட்டபிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை–5 அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்:இ1/ 1647/2018 **(அனுமதிக்கப்பட்டது)**

**111A.** வந்தவாசி நகராட்சி பகுதிகளில் டெங்கு நோய் இல்லாத வீடுகள் அடையாளம் தெரிந்து கொள்வதற்காக அனைத்து வீடுகளிலும் (24 வார்டுகளில்) Sticker ஒட்டுவதற்காக (Smail Sticker) 6000 எண்ணிக்கை அச்சடித்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி அளிக்கப்படுகிறது.

(ந.க.எண்.1567/2018/இ1, நாள். ) **(அனுமதிக்கப்பட்டது)**

ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்
வந்தவாசி நகராட்சி